**செய்தி வெளியீடு** **நாள் : 22.07.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கனவுத் திட்டமான வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வடசென்னை மக்களின் வளர்ச்சிக்காக நீர்வள ஆதாரத்துறை மற்றும் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான பயன்படுத்தாத இடங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய திட்டங்களை செயல்படுத்தவதற்காக**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (22.7.2024) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில் அமைந்திருக்கின்ற நீர்வள ஆதாரத்துறைக்கு சொந்தமான பணிமனை (ம) பண்டகசாலை இடத்தினையும் மற்றும் வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பயன்படுத்தாத பழைய பொது பண்டகசாலை இடத்தினையும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வடசென்னை மக்களின் வளர்ச்சிக்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய திட்டங்களை செயல்படுத்தவதற்காக மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய** கனவுத் திட்டமான வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் இன்று காலையில் இருந்து துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களும், துறையினுடைய உறுப்பினர் செயலர் அன்பிற்கினிய திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா அவர்களும், வடக்கு வட்டார துணை ஆணையாளர் அன்பிற்கினிய திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்களும், ஏனைய பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை சார்ந்த பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளோடு இன்றைக்கு மேற்கண்ட இடங்களை ஆய்வு செய்தோம்.

அதில் ஒரு 6 ஏக்கர் நிலப்பரப்பில், எந்த வகையிலும் பொதுமக்களுக்கு பயன்படாத வகையில் உள்ள வாட்டர் பேசின் ரோடு என்று சொல்லப்படுகின்ற இந்த தண்ணீர் தொட்டி தெருவிலும், அதேபோல் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில் அமைந்திருக்கின்ற பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பணிமனை இடங்களையும், அந்த இடங்களை மக்களுடைய எல்லா வகையான பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம் என்ற நல்ல நோக்கத்தோடு இன்றைக்கு ஆய்வினை மேற்கொண்டோம். அதைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற திருமண மண்டபம் ஒன்றையும், அதேபோன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியில் கட்டப்படுகின்ற கூடுதல் பள்ளிக்

கட்டடத்தையும், அதேபோல் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூபாய் 12.50 கோடி மதிப்பீ புதிதாக கட்டப்பட்டு வருகின்ற இரத்த சுத்திகரிப்பு நிலையத்தினையும் இந்த பணிகள் குறித்து முன்னேற்பாடுகளை இன்றைக்கு ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தை பொறுத்தளவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** ரூபாய் 4,378 கோடி அளவில் இன்றைக்கு செயல்படுத்த ஆணையிட்டு இருக்கின்றார்கள். அதில் 208 பணிகளில் 108 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதம் 100 பணிகள் மேற்கொள்ளவதற்கான ஆய்வுகள் தொடர்ந்து அந்தந்த துறையின் சார்பில் நடைபெற்று வருகின்றன. இதில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்டப்பணிகள் சுமார் ரூபாய் 685 கோடி செலவில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமே மேற்கொண்டு இருக்கின்றது. அதோடு இல்லாமல் இந்த 4,378 கோடி ரூபாயில் கிட்டத்தட்ட சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் 1,619 கோடி ரூபாயை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவின் பெயரில் பங்களிப்பாக பல்வேறு துறைகளுக்கு வழங்கி இருக்கின்றது. இந்த திட்டங்கள் நிறைவு பெறுகின்ற பொழுது உண்மையிலேயே **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற போதெல்லாம்தான் இந்த வடசென்னை வளர்ச்சி அடைகின்றது.

குறிப்பாக அவர் பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த போது சென்னையினுடைய போக்குவரத்து நெரிசலுக்கு 10 பாலங்களைக் கொண்டு வந்தார். தற்பொழுது வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு 218 பணிகள் ரூபாய் 4,378 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இந்த பணிகள் நிறைவடைகின்ற பொழுது நிச்சயமாக வட சென்னை பகுதி மக்களுடைய வாழ்வாதாரம் அடிப்படைத் தேவைகள் முழுமையாக நிறைவு பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின் போது பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமுலு, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.ஸ்ரீதரன், நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் (பணிமனை & பண்டகசாலை) திரு.ஆசம் பாஷா, மண்டல அலுவலர் திரு.தமிழ்ச்செல்வன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.